திருவிரிஞ்சை

# முருகன் பிள்ளைத்தமிழ்.

வரகவி
மார்க்க சகாயதேவர்

அருளிச்செய்தது.

(சுக்கில வருடம்)

R. S. Sambasiva Sastri

R.S. சாம்பசிவ...

2273

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
GOVT. OF MADRAS, MADRAS

894.811



# திருவிரிஞ்சை

# முருகன் பிள்ளைத்தமிழ்.

## கணபதிதுதி.

[illegible]ந்தாரணுந் தென்விரிஞ்சைத் தோகைமயில் வாகனன்மேற்
சந்தமுறும் பிள்ளைத் தமிழ்பாடச் - செந்தமிழ்சேர்
வாக்கெனக்கு நல்கி மதமா முகக்கடவு
ளூக்கமுடன் காப்பானுவந்து.

## பருவத்தொகை.

சாற்றரிய காப்புச்செங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய
வம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
யம்புசிறு தேரோடும் பத்து.

## காப்புப்பருவம்.

### திருவருள்.

திருக்கஞ்ச விருகரத்தி னபயவர தமுஞ்சேர்
திகழுமர கதமளித்த தெய்வசிகா மணியை
யருக்கன்சந் திரன்றவழும் புரிசைவிரிஞ் சையில்வா
ழாறுமுகத் தரசையெமை யாண்டவனைப் புரக்க
பெருக்கஞ்சந் ததமேவுஞ் சிவநாத னிடத்திற்
பிறந்தவொரு சிறுபாலன் பெருங்காணி பெறவே
யருக்கஞ்சன் முதலமர ரரகரவென் றேத்த
விளைத்தபிறை சூடுமுடி வளைத்ததிரு வருளே.

## திருநீறு.

வேறு.

முடியா முடையாய் குமராசிவ மோக்ஷத்தேற்று
முருகா வசுரே சர்களாகிய காட்டைப்பாற்று
முனிவா கருணை கரனேமறை வாக்கிற்சாற்று
முடியா முதலே தனையோதிம னுர்க்குப்பூட்டு
மடியார் துணையே யவர்பால்வினை யாட்டைக்காட்டு
மமுதே கனியே நறவேமுரு காற்றைக்கேட்கு
மரசே யெமதா ருயிரேயெமை யூத்தைக்காட்டி
லடையாநெறிநீ யருள்வாயென வாழ்த்திப்போற்றி
விடியா மலமா யைகளாமிரு டீர்த்துத்தீர்த்து
விழிநீர் தருயோ கிகள்சேர்தரு வீட்டுக்கேற்ற
வெளிரூ வமுதா யுலகோரிடர் நீக்கப்பாட்டு
மிகவோ தமுனு ளொருநேயனு ணுக்கீற்றீட்டும்
வடிவே லுடனே வயல்சூழ்கர னூர்க்குட்டோற்று
மயிலே றியவீசய் சிறுவாணுதன் மேற்பொற்றுத்த
மலைமான் முலையூ றியபாலொடு கூட்டித்சாத்து
வளைபோன் மதிபோ லொளிசேர்திரு நீற்றுக்காப்
[பே.

## மார்க்கசகாயசுவாமி.

வேறு.

சீரியவே லாயுதனைச் செவ்வேளைக் குகனைத்
தேவர்கள்சே னாபதியைத் திருமயில்வா கனனைக்
காரியகா ரணங்கடந்த கடவுளையெங் கோனைக்
கரபுரியி லாறுமுகச் சேவகனைக் காக்க
கூறியகொங் களதேசத் தனபாலன் மகிழக்
குளிர்பிறையுஞ் சடைமுடியு மழுமானும் பணியும்
வாரியிருட் கடுமிடறு நுதல்விழியு மறைத்தே [னே
மறைப்புரியில் வழித்துணையாய் வந்தருள்சே ௬

மரகதவல்லி.

வேறு.

அரவின் மணிகளு மருண கிரணமு மழிய வொளி
விடு தோற்றனே, யழகு பொழிதரு மிளைய குும
ரனை யசுரரொடுபொரு சீற்றனே, யயனு மலைவுறு
மறையி னிறுதியை யமுத மொழிகொடு தேற்ற
னே, யடிமை படுமவர் கொடுமை பொடிபட முடுகி
யெழுமரு ளூற்றனே,
இரவி யளியின முரல நறவுறு குவளை மலர்கமழ்
நாற்றனே, விழிக ளொருபதொ டுபய முடையனை
மிருக மதமகில் சேற்றனே, விருது பெருகரு
தலர்க ளுடலுயிர் விடுதி பெறவடு கூற்றனே, விபு
தர் புகலூர புரியில் வருமறு முகனை யணிதிருப்பு
நீற்றனே,
யிரவி மதியழ னயனி பரிபுர சரணி கௌரி சடா
க்ஷரி, யிறைவி திரிபுர தகனி முனிவர்க ளிதய
மலரை விடாக்கினி, யெழுக டலுமெழு புவியு
மருளியு மிளமை நலமழி யாக்குயி, விழிஞர்
தொழிலது புரியு மறிவில ரிடர்க ளிடியவ ராப்
பிடி,
வனாயி லுவரபவள் கருணை மழைபொழி வதனி சடி
லிம கோத்தமி, வடுகி பகவதி குமரி சிவனிட
மருவி நிறையகலாத்திரு, வனச மலர்மகள் சகல
கலைமகள் வழிய டிமைவினை தீர்ப்பவள் மலை
யின் மடமகள் வருண மரகத வலிய மலியவள்
காக்கவே. (சு)

கங்கை.

வேறு.

எம்பா தகநீக் கியவே லவனை யிமையோ ரரசைக்
குமரே சனையென் னிதயத் திருளைக் களையிங்
குகனை,
யம்பவன் மொழியம் மையளித் தருளு மமுதைக்
கனியைக் கரனூர் தனில்வா ழடியார் பெருவாழ்
வையளித் தருள்க,
கம்பா நதிகோ தமைகா வேரி காளிந்திகோ தாவிரி
பாலிநதி கனகா நதிகண் டிகைகுண் டிகைசூழ்,
பம்பா நதிவா ணிசீ தைநதி பாஞ்சா லிதபோ நதி
யே முதலாம் பலவா நதியா னபகீ ரதியே. (ரு)

கணபதி.

வேறு.

மூந்திவரு சூரரின மாளச் சிவந்தவனை முன்புகட
னீர்சுவற வேறெட்ட செங்கையனை, முண்டகனை
நால்வினவி வாதித்த புங்கவனை மொய்ம்புபெற
வேதொழுத கீரற்கி ரங்கினனை,
யெந்தையையென் னுயிரையென் னுயிக்கருந்துணை
யை யென்சிரசி லோலமிடு பாதச்ச தங்கையனை,
யின்பமுரு கேசனை மெய்ஞ் ஞானக் கொழுங்
கனியை யெங்கள்கர னூரின்மயி லோனைப் புரக்
தருள்க,
வந்தரமெ லாமதிர வாய்விட்டு மண்டிவரு மஞ்ச
லரெ லாமுறிய வால்சுற்றி மஞ்சுதனை, யங்கை
கொடு தாவியத னீரைப்பி ழிந்துகட லம்புவியெ
லாமெளிய வோடித்தி ரும்பிவிட,

மந்தரமெ லாமசைய வேமுட்டி யங்குலவு வன்பரிதி
தேர்முறிய வேகுத்தி வெண்டாளம், வந்துலவு
மேழ்சலதி நீர்வற்ற வுண்டுமிழும் வண்டுகண்ம
தாசலம தாயுற்றிருந்தவனே. (சு)

வைரவன்.

வேறு.

ஒருகைமணி யொருகைகயி றொருகைசர மொரு
கைசிலை யொருகைக்கட மொருகை வடிவாள்,
பொருகழுமு ளொருகைசிர மொருகையிவை யுடை
யகர புரிவடுக னடிதுதி செய்வா,
முருகையரி மருகைமயின் முனியைமறை முதலை
யறு முகனையுமை மகனை யடியா,
ரிருளகல வருகுகனை யெமையடிமை கொளுமரசை
யினிமையொடு புரவு செயவே. (எ)

திருவேல்.

வேறு.

முடியொ ராறுடை யானையெம் மையனை முதல்வ
னைச் செவ்வேளைப்,
படியெ லாம்புகழ் தேவனை விரிஞ்சையம் பதிமுரு
கனைக்காக்க,
கொடிய தானவர் குருதியி லாடிவெங் குடலெனுந்
தொடைசூடி,
நெடிய யாக்கையி னிணமெலா மருந்திய வவன்
கையி னெடுவேலே. (அ)

திருமயில்.

வேறு.

தொண்டனுகவெ மைக்கொளுஞ்சிறு தோன்ற
 லைச்சதுர் வேதநூல், சொல்லு மாமணி வாயனைச்
 சுகமாயி ருந்தும ணங்கொளும்,
வண்டுசேர்தரு நீப மாலையனைத்தி ருக்கர னூரில்
 வாழ், மரகதக்கொடி பெற்ற செஞ்சுடர் மணியை
 யன்பொடு காக்கவே,
யண்டகூட நடுங்க மால்வரை தூளி யாகவத் தூளி
 யா, லாழி யேழுநி ரம்பி மேடுபெ டக்க லாபம
 டித்தெழுந்,
தெண்டிசாமுக முங்க டைக்கணி மைக்கு முன்
 னமு லாவியே, யென்று மாடலி யற்றி வாழவ
 னேறு இன்றமயூரமே. (௬)

திருமுருகாற்றுப்படையும் திருப்புகழும்.

வேறு.

அம்மைமுலை யுண்டுவிளை யரடுமிளை யோனையெமை
 யாட்கொண்ட குமரேசனைச்,
செம்மையுள வாறுமுக னைத்திரு விரிஞ்சைவரு சே
 யைப் புரந்தருள்கவே,
மும்மைமல மகலநக் கீரமுனி சொன்னதிரு முருகா
 றெனுந்தேறலு,
மெம்மருண கிரிநாத ரோதுபதி னாறு யிரந்திருப்
 புகழமுதுமே. (௭)

பலதேவர்கள்.

வேறு.

கந்தனை வேளை விரிஞ்சையின் மேவு கடம்பனை மாது
மையாண்,
மைந்தனை வேலனை யெங்கும ரேசனை வந்திரு தாள்
பணிவா,
ரிந்திரர் வானவர் சந்திர சூரிய ரெண்டிசை யோர்
முனிவோர்,
செந்திரு மார்பினர் விஞ்சையர் பாதலர் செங்கம
லாசனரே. (கக)

காப்புப்பருவம் முற்றிற்று.

---

## 2. செங்கீரைப்பருவம்.

உம்பரசு ரேசாபுரி வாதனை யுரைத்தருள வுயர்கயிலை
வாழ்ப ரமனுர், யோகத்தி லுன்னவெண்ணீறணியு
நுதல்விழியி லோராறு பொறிகள் சிதற,
வெம்பொறி யெழுந்தண்ட ரண்டம் பரந்துலவ விண்
ணவர்க ளஞ்சி மலைவாழ், வித்தகர்க் கோதவப்
பொறிகடமை வாவென்று வெங்கனலி தனையி
தனை நீ,
சப்ப்ரமொடு சரவணந் தனில்விடுதி யென்னவத்
தழலவன் கொண்ட கலவத், தழல்வெம்மை யாற்
கங்கை தனில்விடக் கங்கையுஞ் சரவணந் தனில்
வைத்திடச்,
செம்பதும முகமா றுடன்குலவு காஞர செங்கீரை
யாடி யருளே, திருமுருக வரிமருக வரதகுரு பர
குமர செங்கீரை யாடி யருளே. (க)

ஆரமா முமைதாட் சிலம்பினவ மணிசிதற வதனை
யர னாட வொன்பா, னாயிழைய ராயவர் கருப்பந்
தரித்துமையி னருளினா லவர்க ளருளும்,

வீரவா குவையுமடல் வீரகே சரியையும் வீரமா
கேந்திரனையும், வீரமா கேசனையும் வீரபுரந் தர
னையும் வீரராக் கதனையுந் தோட்,

டாருலாம் வீரமார்த் தாண்டனையும் வீரராந் தகனை
யும் வீரதீரன், றன்னையுந் தம்பிய ரெனக்கொண்டு
தோலாத சமரேறி வடிவேலி னாற்,

தீரரா நிசிசரரை வென்றகர னூராளி செங்கீரை
யாடி யருளே, திருமுருக வரிமருக வரதகுரு பர
குமர செங்கீரை யாடி யருளே. (௨)

ககனமுக டுருவியெழு மகமேரு கிரியையொரு கன
கபம் பரமாகவே, கைக்கொண்டொ ராயிரக் கதிர்
முடிச் சேடனைக் கயிறுக வேசுருட்டிச்,

சகலலோ கமுமுறத் தழுவியிடு கமடமது தன்னை
யொரு குறியாகவே, சங்கரர் மகிழ்ந்தருள வாவி
கட் கிடையூறு சாராம லாடு குமரா,

மகரதோ ரணமறுகு மாணிக்க மண்டபமும் வயிடூரி
யப்புரி சையு, மரகதக் கோயிலும் பவளநித் தில
மருவி மதியின்மண் டலம ளாவுஞ்,

சிகரகோ புரமுமொளி தழையவாழ் கரனூர செங்
கீரை யாடி யருளே, திருமுருக வரிமருக வரதகுரு
பரகுமர செங்கீரை யாடி யருளே. (௩)

பரவையை யுறிஞ்சிவட குலகிரி குலுங்கிடப் பாய்ந்
தண்ட ரண்ட மெல்லாம், பயமெழ விழித்துவிழி
களிலனல் கொழித்துரக பந்திமுடி திண்டாடவே,

தரணியி னடந்துதிசை மதகரி யுடன்பொருது தா
வியா காய மேவித், தாரகை யுதிர்த்தமரர் தாரு
வை யழித்துவரு தகரினே றிய குமரனே,
வரையில் குங்குமமரமு மணநாறு சந்தனமு மது
வொழுகு புன்னாக மும், வாழையின் கனியுமணி
யாரமு முடன்கொண்டு மழைபொழியு மேக மன்
வாய்த்,
திரையெறிந் தொருபாலி நதிவருங் கரனூர செங்
கீரையாடி யருளே, திருமுருக வரிமருக வரதகுரு
பரகுமர செங்கீரை யாடி யருளே. (௪)

பங்கயத் திறையைமறை நூல்வினவி யோமெனும்
பதவுண்மை நீசொல் லெனப், பண்டவன் றிண்
டாடல் கண்டுகுட் டித்தளை படுத்திவண் சிறை
யூடுவைத்,
தங்கையிற் செபமாலை குண்டிகை தரித்தபய வர
தத்தொ டேக முகமா, யன்றமர்ந் தண்டரண் டங்
களையு முண்டாக்கு மையனே துய்ய வரசே,
கொங்குடைச் சண்பகா டவியுமிள வாழைக் குருத்
துமணி சேர்க ரும்புங், குளிர்தாழை யுங்கமுகு
விடுபாளை யுங்கனக கோபுரக் கொடியு மடவார்,
செங்கையிற் கழலுமழை முகிலளவு கரனூர செங்
கீரை யாடி யருளே, திருமுருக வரிமருக வரத
குரு பரகுமர செங்கீரை யாடி யருளே. (௫)

வேறு.

மாசது பொருந்தாத காசிப னுடன்கூடி மாயையரு
ளும்பால ராம், வாளரி முகன்முரு காசுர னெனும்
வேழ மாமுக னெடுஞ் சூரனு,

அசோமுகி

காசமள வுஞ்சிற சோமுகி யெழுந்தேழு காசினியு
மொன்றேறவே, காவலது கொண்டான வானவர்
பயந்தோடு காலமவ ரஞ்சா மலே,

வீசுதிரை யம்போதி நீர்சுவற மஞ்சான வேடமொ
டெதிர்ந்தோல மாய், மேருகிரி யுந்தூளி யாகவரு
வெஞ்சூரர் வீழவிடு கெம்பீரனே,

யாசறு விரிஞ்சேச னாரரு ளிளங்காளை யாடியருள்
செங்கீரையே, யாறுமுக முந்தோளு மேரொழு
கிளங்காளை யாடியருள் செங்கீரையே. (௬)

கோடிமணி யந்தூணி னாட்க வரங்கூடு கோதையர்
நடங் கூரவே, கோலமத னன்போலு மாடவர்கள்
கண்டாசை கூரவிடு வண்டோ டியே,

நாடியவர் மஞ்சான வோதியி லலங்கார நாண்மலர்
முகந் தூதுவாய், காதமமர் கெஞ்சாசை யோதுத
லெனும்பாலி நாடுடைய கெம்பீரனே,

பாடிமறை கொண்டாட வாரமுத முண்டார்கள் பார்
வைகள் சலந் தூவமா, பாதக முறிந்தோட மாதவ
ரெழுந்தார வாரமுட னின்றுடவே,

யாடிய விரிஞ்சேச னாருளிளங் காளை யாடியருள்
செங்கீரையே, யாறுமுக முந்தோளு மேரொழு
கிளங்காளை யாடியருள் செங்கீரையே. (எ)

தாறுடைய பைம்பூக மாதவர் வரும்போது சாமரை
தருஞ்சோலை சூழ், தாழைமயி லின்சாயன் மாத
ரிடை மின்சோதி தானென்ன மலர்ந்தேடலா,

நாறுமண முங்கூடி நீறுபுனே யன்பாளர் ஞானவிழி
யின்பாணிபோ, னூளுமரு வுந்தாது தேறல்சொரி
யும்பாலி நாடுடைய கெம்பீரனே,

சீறுமர வம்பாதி மாமதி கருங்காலி சீதவன சந்தாது
செந், தேனொழுகு மந்தாரை தாதகிசெழும்பூளை
தேவர்தலை யென்பாமையோ,
டாறணி விரிஞ்சேச னாரு ளிளங்காளை யாடியருள்
செங்கீரையே, யாறுமுக முந்தோளு மேரொழு
கிளங்காளை யாடியருள் செங்கீரையே (அ)

மாரமத னன்றேரு மானையு மகிழ்ந்தேறு வாசியு
மவன் காளமும், வாளியு நெடுஞ்சோலை யியலல
வம்போடு வார்சிலை தரும்பாரில் வாழ்,
நாரைவன சந்தாவு மாரலிரை யென்றோடி நாடிநுக
ரும்போ தெலா, நாவிலதில் வந்தூறு தேனுநுக
ரும்பாலி நாடுடைய கெம்பீரனே,
பூரணி கொடுஞ்சூலி நீலியுமை கங்காளி பூமக டொ
ழும்பூவை மால், பூவிலுறை யுந்தேவன் மாமுனி
கரன்றூய பூசைபுரி யும்பாதனை,
ராரணி விரிஞ்சேச னாரு ளிளங்காளை யாடியருள்
செங்கீரையே, யாறுமுக முந்தோளு மேரொழு
கிளங்காளை யாடியருள் செங்கீரையே. (கூ)

நீதிபெறு மன்பாளர் பாவவெயி லண்டாம னீழலரு
ளுஞ்சோலையே, நீடிய கொடுஞ்சூர ராகிய கருங்
காடு நீறெழ வெழுந்தீபமே,
நாதமொடு கொண்டாடு வாரிரு ளிரிந்தோட நா
டொறு மெழும்பானுவே ஞானியர்க ணெஞ்சான
கோயிலு மடங்காத ஞானநிறை யம்பரமே,
மேதினியி னெந்தாரை யேழ்பிறவி யின்றீர மேவிட
விடுந்தோணியே, மேதியில் வருங்கால னூரெமை
யடும்போது வீடுதவு சஞ்சீவியே,

யாதிய விரிஞ்சேச ஞாரு ளிளங்காளை யாடியருள் செங்கீரையே, யாறுமுக முந்தோரு மேரொழு கிளங்காளை யாடியருள் செங்கீரையே. (௧0)

செங்கீரைப்பருவம்முற்றிற்று.

---

## தாலப்பருவம்.

கரியுரி கஞ்சுக மாகப் புலியதள் கடிகமழ் பட்டாகக், கனசடை முடிமயிர் முடியா கச்சிவ கங்கை யொர் பங்கா கப்,
பரிமள மதிகே தகைமட லாகப் பாம்பிரு குழையா கப் படுகனல் விழிபொட் டாகச்சூலம் பாணி யில் வாளா கத்,
தெரிய விளங்கிய நான்மறை யாகிய தேசியி லேறி மு னாட், செட்டி தனக்கு வழித்துணை யாய்வரு சேவக னுளமகி ழத்,
தரியல ருடலஞ் சாடிய வேன்முனி தாலோ தாலே லோ, சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ தாலேலோ. (௧)

செங்கையி லிடுவளை கலகல கலெனச் செம்முலை வட மசை யச், சிலையெனு நுதன்மட வனிதையர் குடைதரு தெளிபுன லிறைவா விப்
பங்கய மலரிடை யிடையிடு பணிலம் பவளச் செவ்வா னிற், பலபல முழுமதி நில்விய வென நிகழ் பாலித் திருநாடா,
கங்கையு மரவு மிளஞ்சிறு பிறையுங் கதிர்விடு கொக் கிற குங், கடிகம ழிதழியு மறுகு மெலும்புங் கன சடை முடிசூ டுஞ்,

சங்கரர் மகிழ்வொடு தழுவிய பாலக தாலோ தாலே
லோ, சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ
தாலேலோ. (௨)

களைகளை கடைசியர் முலைகளி லொழுகிய களப
நெடுஞ்சேற் றிற், கனவளை யுழவர்க ளுழவென
வுழுதொளி கான்றிடு விதையெனவே,

விளைவய லிடைவெண் டரளந் தூவிவி ரிந்தொளிர்
தாரகை சூழ், வேள்குடை யாமதி போலத னூடு
விளங்கிய பானுடா,

வளமலை மகளுமை கௌரி புராதனி மரகத வல்லி
கை யான், மார்பி லணைத்தமு தந்தர வுண்டு மகி
ழ்ந்து வளர்ந்தணி யும்,

தளையவிழ் நீப முலாவுபு யாசல தாலோ தாலே
லோ, சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ
தாலேலோ, (௩)

வாவியுண் மேதியி னங்திரை வாரியுண் மழைசொரி
கருமுகில் போல், வந்து பணிந்திட வாளையொர்
கன்றென மடிமுலை மேன்முட் டத்,

தூவிய பான்மல ரோடை நிறைந்தணை துன்றி வழி
ந்தோ டச். சோபன மாயுழு மள்ளர்கள் கால்வழி
தோறுமொ துக்கிடப்,

பூவிரை கமழும் பழனத் தலையிற் புகுதச் சாலியெ
லாம், பொன்னிற மாகியெ ழுந்து வளர்ந்து பொ
லிந்தொளி யொடுவா னந்,

தாவிய பாலிரு ளுடை யாதிப தாலோ தாலேலோ,
சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ தாலே
லோ. (௪)

நிலனெனு மொருகுல மடமகள் சிறுபயி ராயசி
ரூர்க ளெலா, நின்று வருந்தி யிடாமன் முலைப்பா
னேயமொ டீவது போன்,

மலைதரு மருவி விரைந்து வரக்குற வாணரி னங்க
ளெலா, மகிழ்வுட னுடுகு றிஞ்சி நிலந்தனில் வாழ்
பசு மாமயிலா,

பல்பல முனிவர்க ளடியிணை பரவிப் பதமுட னிசை
பா டப், பனிபடு சிறுபிறை யொளியது மிளிரப்
பகிரதி முடிமீ திற்,

சலசல வெனநட மிடுமெவர் பாலக தாலோ தாலே
லோ, சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ
தாலேலோ. (ரு)

மந்திர மறியா யாகம மறியாய் மாமறை நூலறியாய்,
வழிபட வறியா யின்றுன் பூசை வழுவா வகை
செயவே,

முந்திய காணியை யொற்றிவை யென்று மொழிந்
திடு ஞாதியர் த, முடிசிறி யோனடி தீண்ட வவன்
கை முன்புதன் முடிதீண் டக்,

குந்திய சிறுகா ணேவா ரச்சிவ கொள்கையர் கொண்
டா டக், கோதறு சீதள நீரபி டேகங் குறைவற
வேபுரி யச்,

சந்திர மௌலி வளர்த்தவர் பாலக தாலோ தாலே
லோ, சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ
தாலேலோ. (சா)

வேறு.

செந்தமி ழாமலர் தூவிய வஞ்சமி லாதத போதனர்
சிந்தையொ ராலய மாகிய சீமானே, செங்கதி

ராரமு தூறிய வெண்கதிர் சூழ்தரு மாமலை செண்
டென வேவிளை யாடிய கோமானே,

வெந்தழல் போல்வரு தானவர் செங்கறை வாரியின்
மூழ்கிவெ றுங்குடன் மாலிகை சூடிய வேலோ
னே, விஞ்சையர் கேசரர் வாசவ னும்பர்கன்
மாதவ ரோதிய மென்சிறு வாரிச மாமிரு தா
ளோனே,

யந்தர மாயுழ லாமலு னன்பர்க ளோடெனை யாளும
ருந்துணை யேயமு தேகனி யேதேனே, யம்புய
னுலறி யாமறை யின்பொரு ளானது காணுமோ
ரஞ்சன மேயர சேயடி யார்வாழ்வே,

தந்தம தாசல மாமுக வெந்தைக ணேசர்ச கோதர
சண்டம யூரகு ணசல தாலேலோ, தண்டலை சூழ்
கர னூருறை யுங்கும ராமுரு காசிவ சங்கர னு
ரருள் பாலக தாலேலோ. (எ)

அண்டர்க ளூர்குடி யேறவு மண்டிய சூர்பொடி யா
கவு மங்கையி லாழியில் வேல்விடு மாசூரா, வைம்
புல னுலுழ லாமலு மந்தக னூர்பிடி யாமலு மன்
றடி யேன்முடி சூடிய சீர்பாதா,

தெண்டிரை வாவியில் வாளையெ ழுந்து நிலாமதி
மேருசெ ழுங்கமு காடவி தாவிய பானுடா, செங்
கம லாசனி தாழுமை கொங்கையி லூறிய பாலமு
துண்டழ காய்விளை யாடிய சீராளா,

வண்டு முகாரித நாசிகு றிஞ்சிவ ராளிபூ பாள மகிழ்
ந்திசை யாயிவை யோதிய தார்மார்பா, மந்தர
மோடொரு மால்வரை வெஞ்சமர் கோலிய தா
மென வன்களி றுனவை பாய்மலை வாழ்தேவா,

தண்டமி ழோதிய பாவலர் சஞ்சித வேழ்பவ வேர்
கனை சண்டம யூரகு ஞசல தாலேலோ, தண்
டலை சூழ்கர னுருறை யுங்கும ராமுரு காசிவ
சங்கர னருள் பாலக தாலேலோ. (அ)

புந்தர மாமுலை மாதர்ம கிழ்ந்துற வாய்விளை யாடிய
மண்டப மேடையின் மேலொரு தேரோடே, வந்
தெழு மாதவ ஞர்பரி யங்கெழு வீணையி னேசை
மகிழ்ந்திரு வார்குழை யேறவு நடவாதே,

யந்தர மேவிட வாரமு தந்தரு மாமதி யானதன்
பிறகேவர வீரிய வேளானே, னங்கையில் வாளிக
டேவிய ருந்தவ யோகிகண் மீதுநடந்தம ராடியபா
லிம காநாடா,

செந்திரு வேரக மாடர வின்கிரி யீசுர மாமலை செங்
கழு நீர்மலை யாடக மூதூரா, செந்தில ஞமலை
கூடலு டன்கம லாலய மேவிய செம்புய மாறுட
ஞறுள தாளாளா,

சந்திர சேகரி யாயிதி கம்பரி நாரணி தான்மகிழ்
சண்டம யூரகு ஞசல தாலேலோ, தண்டலை
சூழ்கர னுருறை யுங்கும ராமுரு காசிவ சங்கர
னருள் பாலக தாலேலோ. (கூ)

பங்கய மோவர மோவுரு வைங்கணை யோபிணை
யோபர வுங்கய லோகடு வோவடு வோவேலோ,
பைங்கழு நீர்மல ரோகரு குங்கட லோநம னே
பல பண்பயில் சேர்சர மோமத வேள்வாளோ,

வெங்கொலை யோகள வோவெனும் வஞ்சிய ராசையி
ஞலவர் வெங்கணை யேபுகழ் வாரொடு கூடாதே,
வெண்பொடி பூசியி டாவலு வஞ்சக மூடர்கண்
மேலினி வெண்கவி மாலையெ னுவது பாடாதே,

மங்கல மாகிய நூலறி வுங்குல மானமு மாளவ ரும்
பசி யாலடி யேனிட ராழாதே, வண்கதி ரீதவ
ஞர்வெயின் மஞ்சினை யேநிக ராகிம றைந்திடு
வாழ்வெனு மாயையில் வீழாதே,
சங்கையி லாவினை யேனையு னன்பரோ டாளுமனே
கர சண்டம யூரகு ஞ்சல தாலேலோ, தண்டலை
சூழ்கர னூருறை யுங்கும ராமுரு காசிவ சங்கர
னருள் பாலக தாலேலோ. (க0)

தாலப்பருவம் முற்றிற்று.

---

## சப்பாணிப்பருவம்.

அண்டகூ டச்சிகர மடையத் துலங்கியணி யான
கமு காடவியெலா, மாதவன் மணித்தேர் வரும்
பொழுது பட்டுதிரு மாரங்க ளைப்பூவைமார்,
வண்டலா யத்தவர்வ குத்தபா வைக்கினிய மாலையா
கக்கோத்திடு, மங்கையர் முலைக்குமிரு செங்கை
யில் வளைக்குமவர் வள்ளைமே வியகுழைக்குங்,
கொண்டலா குங்கரிய கொண்டைக்கு மமுதூறு
கோவைக்கு மழகானதோர், கோகில மொழிக்கு
மவ ரோதிமந டைக்குமயல் கொண்டிளைஞர்
தூதுவிடவே,
சண்டவே ளூர்திமறு கெங்குமார் கரனூர சப்பாணி
கொட்டியருளே, சங்கரிதி கம்பரிசி தம்பரித ருங்
குமர சப்பாணி கொட்டியருளே. (க)
வேலியா குங்குமுக மெனுமடவி விடுபாளை வீசுசா
மரையாகவும், வெண்சங்க மோலமிடு மேரிமடை
மதகுகண் மேளவொலி போலிசையவும்,

வாலிதாம் வயல்வனச மணிவிளக் கேந்தவும் வண்
டினம் பாடியிடவும், வாடையுல வும்புதிய சோலை
மண் டபாகடுவின் மாகடஞ் செயுமயூரங்,

கூலியா கத்தரள மணியளக் திடுமுழவர் கோதைமா
ருகிலணையக், கோலமே னிச்சாயல் கண்டுகா
ணிக்கரிப கொண்டையது சாய்த்தொதுங்குஞ்,

சாலிவா னளவிவளர் பாலிசூழ் கரனூர சப்பாணி
கொட்டியருளே, சங்கரிதி கம்பரிசி தம்பரித ருங்
குமர சப்பாணி கொட்டியருளே. (உ)

துந்துவெனு மொருநிருத னண்டரண் டந்தனது
தோள்வலியி னுளவதனுற், றுன்பசா கரமூழ்கி
யின்பசா கரமீது துயிலுமா லுடன்மொழியவே,

யந்தமா லும்பர்களை யஞ்சலென் றவனுட லழிக்கவா
யிரமுளரியா, லர்ச்சிக்க வோராழி யன்றருள்வ
ழித்துணைவ ரங்கையாற் றழுவுமரசே,

வந்தமத கரியொலியும் வாவுபாய் மாவொலியு மணி
நெடுங் தேரினொலியும், வந்தனைசெய் வார்களர
கரவென்னு மொலியுமட மாதர்நட மாடுமொலி
யுஞ்,

சந்தமறை யொலியுமலை யொலியுமிகு கரனூர சப்
பாணி கொட்டியருளே, சங்கரிதி கம்பரிசி தம்
பரித ருங்குமர சப்பாணி கொட்டியருளே. (ங)

பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம் புரக்க
வெழு நாண்மறவனுய்ப், புறவுற வளைத்தெனது
பெயர்முட்டை பாடெனப் பொன்போலு மென்
றுபாட,

வெய்யான பாலைக்கி தேலாது நும்பெயர்வி ளம்
பென விளம்ப வவர்மேல், விழுந்ததுளி யென்
றெடுத் துப்பாடி யவர்நாவில் வேல்கொடுபொ
றித்தசதுரா,

மையான மஞ்சுதவழ் காவில்வா ழுதிர்புன்னை மல
ரும் பைத்தரளமா, வடபான திக்கரையின் வ
ண்டலம் பாவைமுலை மார்பினி லணிந்துமகிழ்
வாய்த்,

தையா விழிச்சியர்கள் விளையாடு கரனூர சப்பாணி
கொட்டியருளே, சங்கரிதி கம்பரிசி தம்பரித ருங்
குமர சப்பாணி கொட்டியருளே. (சு)

பரமார்தரு மாதியுஞ் சிவஞான தானமும் பரவுமை
வகைவேள்வியும் பலபலவி சிட்டகா ரணமோடு
தருமமும் பாதகமு முறைசொர்க்கமும்,

நரகவிய லுஞ்சனன மரணவிய லுஞ்சொர்க்க நரக
சே டத்தினியலு, ஞானபோ தமுமினிய பரிகார
மாமியலு நற்கோபு ரத்தினியலுங்,

கரகமல முடிமிசை குவித்துமன முருகியிரு கண்க
ணீர் நின்றுசொரியக்; கடலேழு மங்கையிற்
கொண்டகுறு முனியன்று கயிலையங் கிரியின் மே
விச்,

சரணதா மரைதொழ மொழிந்தகர னூராளி சப்
பாணி கொட்டியருளே, சங்கரிதி கம்பரிசி தம்
பரித ருங்குமர சப்பாணி கொட்டியருளே. (௬)

வேறு.

துக்கமக லத்தினநி னைப்பவர்ம னத்திருடு ரத்தியம
ணித்தீபமே, சுற்றியபி றப்பினிலி யற்றியவி னைத்
திடர்து வைக்குமொரு சிற்றுனையே,

மைக்கடுவ டக்கியவ ழித்துணைவர் பொற்புயம லேக்
கணியு முத்தாரமே, மற்றுங்க ரற்றசுரு திப்பொ
ருள்க லேப்பொருண்ம ணக்குமொரு கர்ப்பூரமே,
நெக்குருகு சிட்டர்கள்கு ளித்திடவ ருட்புனனி
றைத்தருளு நெட்டோடையே, நித்தமுத திக்கு
ளுத யப்பரிதி யிற்சுடர்நி கழ்த்தியம ணிக்கோ
வையே,
குக்குடமு யர்த்தருடி ருக்கரபு ரத்திறைவ கொட்
டியருள் சப்பாணியே, கொட்டமொடெ திர்த்த
வசு ரக்குழுவை வெட்டுமுனி கொட்டியருள் சப்
பாணியே. (சு)

புற்றரவு கச்செனவி சைத்தவர்ம ழுக்கனல்பொ றுத்
தகம லப்பாணியார், புத்தமுதி னைச்சுரர்க ளுக்
குதவி நச்சதுபொ சித்தகரு ணைப்பார்வையார்,
வெற்றியிட பக்கொடிப டைத்தவர் நடத்தொழில்வி
ளைத்தவிரு பொற்பாதனார், வித்தகர்வ ழித்துணை
வர் பொற்புயம ணைத்தவள்வி ருப்பமுறு நற்பா
லனே,
சிற்றிடைவ ருத்துசிக ரக்கனத னத்தியர்தெ றித்த
கள பச்சேறுசூழ், தெற்றிகள்பு லர்த்தமது ரத்த
மிழ்ம ணத்திடுநெடு சித்தசர்ம ணித்தேரதூர்,
கொற்றமுன நற்கரபு ரத்தறுமு கத்திறைவ கொட்
டியருள் சப்பாணியே, கொட்டமொடெ திர்த்த
வசு ரக்குழுவை வெட்டுமுனி கொட்டியருள் சப்
பாணியே. (எ)

கைத்தலம மூப்பெறுக ணத்தவர்க ளுற்றகயி லேத்தி
ரும லேச்சூழலோ, கட்டழகு பெற்றொளிப ரப்பு
மது மட்டுடைய கற்பகம லர்ச்சோலையோ,

வெத்தலமு மெப்பொருளு மிப்படியெ னச்சொன்
மறை யிற்பொருளி னப்பாலுமோ, விக்குவிலெ
டுத்தமத னைப்பொடிப டக்கணிலெ ரித்தவரி டப்
பாகமோ,

நித்தியம லத்தனுவெ னத்தவநி லைக்கணினி னைப்ப
வர்ம னக்கோயிலோ, நித்தமு முனக்கிடமெ னப்
பரவு பத்தர்தொழு நித்தியக ளிப்பாகவே,

கொத்தலர்வ யற்கரபு ரத்தறுமு கத்திறைவ கொட்
டியருள் சப்பாணியே, கொட்டமொடெ திர்த்
தவசு ரக்குழுவை வெட்டுமுனி கொட்டியருள்
சப்பாணியே. (அ)

கற்றவறி விற்பெரிய வப்பரைமு ருட்டறிவு கற்றவர்
கள் கற்றூணிலே, கட்டியுத திக்குள்விட வப்பொ
ழுத வர்க்கதுக டக்கவரு ளைத்தூவுவா,

செற்றுபுனல் மத்தமித ழித்தொடையெ ருக்கறுகி
ருக்குமுடி யெட்டாமலே, யெக்குமத லைக்குயரு
முச்சியைவ ளைத்தவரெ டுக்குமிள மைப்பாலனே,

யுற்றிடுமு ழுத்தியர்மு கத்தில்விழி நித்திலமு திர்க்கு
மளி னப்பூவின்மே, லுற்பலமெ னத்திகழ்வ தற்
குழவர்வெற்றுளமு ருக்கவரு மக்கோலவேள்,

கொற்றவமர் முற்றியதி ருக்கரபு ரத்திறைவ கொட்
டியருள் சப்பாணியே, கொட்டமொடெ திர்த்த
வசு ரக்குழுவை வெட்டுமுனி கொட்டியருள் சப்
பாணியே. (௯)

அப்புடைவ யற்கயல்கு தித்தெழவு திர்த்தகம லத்
தாள நற்சோதியா, லற்றையிரு ளைக்கடிய மைக்
குவளையிற்றுகள தைப்பொருதி டக்காமவேள்,

செப்புமதி முற்றிருளி லுற்றதென வட்டமுள செப்
பிளமு லைப்பாவைமார், சித்தமும யக்கவிடர் சித்
தமுமு றப்பொருதி ருக்கரபு ரத்தேவனே,

முப்பழமி தப்படுபொ ரிக்கறிப ருப்புநெய்மு ளைத்
துவரை யிக்கோடுதேன், முக்கனிவ லப்பமடை
யிட்டுமது ரித்தவடை முப்பொழுது முட்டா
மலே,

கொப்புனல்வ யிற்றிலடை யக்கொளும வற்கிளவல்
கொட்டியருள் சப்பாணியே, கொட்டமொடெ
திர்த்தவசு ரக்குழுவை வெட்டுமுனி கொட்டி
யருள் சப்பாணியே. (௬0)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

---

## முத்தப்பருவம்

சிலையுந்திகழ் பிறையுஞ்சூழ சிறுவாணுதன் மடவார்
சிகரக்கன தனமொன்றிய செம்மாமணி யொளியை
மலையின்மிசை யெழுமாதவ னென்றம்புய மலரும்
வயல்சூழ்கர புரிமேவிய மயிலேறிய வரதா

கலையின்படி நடவாதகொ டுஞ்சூரைய ழிக்குங் [ண்
கனதோள்வலி பெறவேசிவ கயிலைக்கிரி யுடையா
முலையுண்கனி வாயாலொரு முத்தந்தனை யருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனை யருளே. ()

மாலானவர் பாலாழியுள் வளர்கின்றவ ளம்போன்
மானுழுமாமுகி றவழுந்துய மணிமேடையிலேறப்
பாலார்மொழி மடவாரெறி செம்பந்துடல் பட்டே
பனிவான்மதி செய்மைப்படு பாலித்திரு நாடா

வேலாவுமை பாலாசிவ சீலாவனு கூலா
வேதாசுரர் நாதாமயில் வீராகர னூரா
மூலாகம வாயாலொரு முத்தந்தனை யருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனை யருளே.()

தீரக்கவி பாயப்பல தென்னம்பழ மடுவிற்
றிரளாய்விழ நெடுவாளைசி னத்தோடெதிர் நாடிப்
பாரப்புய ருவித்திகழ் பலவைப்பொரு துதிரும்
பலவின்சுளை யுடனேவரு பாலித்திரு நாடா
வீரப்பசு மயிலாகர புரிமேவிய வரதா
விண்ணோர்தொழு மிறைவாசதுர் வேதப்பொருள்
மூரற்றிரு வாயாலொரு முத்தந்தனை யருளே[கமழு
முருகாவரி மருகாவொரு முத்தந்தனை யருளே.()

மற்றுருமொய் வாமாதர்கண் மறுகெங்குமி றைக்கு
மணமார்பனி நீரோடிவ யற்போயது பாயப்
பொற்றுமமெ னச்சாலிவ ளர்ந்தேறிய பாலிப்
புனல்வேலையெ னச்சூழ்கர புரிவாழிளை யோனே
சிற்றாமு தச்சோமன்மு டிச்சூடிந லஞ்சேர்
சேமேல்வரு மீசற்குப தேசந்தனை யருளு
முற்றுகம வாயாலொரு முத்தந்தனை யருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனை யருளே.()

கதிராணிறை செஞ்சாலியும் வயன்மேவுக ரும்புங்
கனசங்கமு மதியுந்திகழ் கமுகாடவி மானு
மெதிராதவ னெழுபோதல ருந்தாமரை மலரு
மெரிமுத்தம ளிக்குங்கர புரிவாழிளை யோனே
யதிராவருண் முகிலேநல மழியாமத களிறே
யறுமாமுக வரசேதொழு மடியார்பெரு வாழ்வே
முதிராமணி வாயாலொரு முத்தந்தனை யருளே
முருகாவரி மருகாவொரு முத்தந்தனை யருளே.()

## வேறு.

அருணாச லப்பதியை நினைவார்த மக்குமொளி யழி
யாத பொற்ச பையையனே, ரறிவார்த மக்குமொரு
கமலால யத்திலுட லடைவார்த மக்கு மலைநீர்,

வருகாசி யிற்சனன மொருவார்த மக்குமருண் மறை
ஞான முத்தி தமதூர், மறுகேக டக்கிலருள் புரி
வார்வ ழித்துணைவர் மகிழ்வாய ணைக்கு மரசே,

குருமாம ணிக்கிரண வெயில்வீசு முச்சியது குவி
கோபுரத்தி லழகார், கொடிமேலி ருக்குமழு மதி
தேவ ரிட்டவொரு குடையாமெ னத்தி கழவே,

திருநாள்பெ ருத்தகர புரிவாழ்தி ருக்குமர திருவா
யின் முத்த மருளே, சிறுதாம ரைக்குநிக ரறு
மாமு கக்குழவி திருவாயின் முத்த மருளே. (சு)

உருகாம னத்திமிர முடையேனி ரக்கமுட னெரு
பூத ருக்கு முதவே, னுலகோர்ப ழித்தசெயல்
புரிவேனி டர்க்கடலி லுழல்வேனி ரக்க வெழு
வேன்,

மருவார்க ளுத்தகுழன் மடமாதர் கட்கடையின் மய
லாலி ளைத்து மெலிவேன், வழிபாடு மர்ச்சனையு
மறியேனு ளக்கமல மலர்மீதி ருக்கு முருகா,

வருகார்வ யற்குவளை யளிபாடி யிட்டபொழு தழ
காயொ ழுக்கி யிடுதே, னடியாரி சைக்குருகி விழி
நீர்து ளித்தருளு மதுவாமெ னத்தி கழவே,

திருவார்செ ழித்தகர புரிவாழ்தி ருக்குமர திருவா
யின் முத்த மருளே, சிறுதாம ரைக்குநிக ரறுமா
மு கக்குழவி திருவாயின் முத்த மருளே. (எ)

அரைமீது கட்டுநவ மணிநாணு நெற்றிதனி லழகாய
பொற்சு டிகையோ, டணிநீறு முத்துவட மிசை
மார்பு நற்செவியி லசைவாய பொற்கு ழையுநீள்,

வரைவார ணக்கொடியு மயில்வாக னப்பரியு மணை
நாறு சிற்றடியுமே, மலமாயை விட்டகல மறவாத
பத்தருடன் வறியேனை வைத்த தலைவா,

விரைவாயொ லித்தபுனல் மதகூடு பட்டதிர விசை
யாகி முட்டி யிளநீர், விழவேகு தித்ததிக வலைவா
ண ரைக்கறுவி விளையாடி யிட்ட கயல்சூழ்,

திரைவாவி யுற்றகர பரிவாழ்தி ருக்குமர திருவாயின்
முத்த மருளே, சிறுதாம ரைக்குவிக ரறுமாமு கக்
குழவி திருவாயின் முத்த மருளே. (அ)

தவநாவ லிற்சடையன் மகவாயு தித்திறைவர் தடை
யான்ம ணத்தொரு வியே, தமிழ்பாடி நற்பரவை
யொடுகூட விட்டவிற றனையோதி நெற்கு வை
யெலா,

நவமாவ ழைத்தருளி நிதியாக மட்சிலைக ணதியூடு
விட்ட பொருடா, னலமார்கு ளத்தில்வர வருளா
னி னைத்தமலர் நடமாடு மொற்றி நகர்வா,

மூவடோள ணைத்தரனை யொருதூது விட்டருகி லல
ராளுரு துக்கி யடைவா,

யவநாசி யிற்கரவு நுகர்சேய ழைத்தருளு மவரோடு
முத்த குதியோர்,

சிவநூன் மணத்தகர புரிவாழ்தி ருக்குமர திருவா
யின் முத்த மருளே, சிறுதாம ரைக்குவிக ரறுமா
முகக்குழவி திருவாயின் முத்த மருளே. (கூ)

சதுமாமு கற்குநிகர் சிவநாதர் பெற்றசிவ தருமாவு
ணங்கு முறைநீ, தவஞம லிப்பொழுது பரிபூச
னைக்கிளையை தருகாணி யொற்றி தரவே,
யிதுதாய்த ணக்குமொழி யெனுஞாதி கட்கிசைய
வியலுவு ரைக்க வரனே, யினியேது திக்குமிலை
யெனவாடு மப்பொழுதி லிளையாய்ம னக்க ன
விலே,
விதவேதி யத்தலைய னெனவாயு ரைத்தப்டி விடி
போது தற்சு தனைநீர், விடமூழ்கி டச்சுருதி யறி
வோதி யப்புமுடி விடவேசி ரத்தை வளைவார்,
திதமாய்வ ளர்த்தகர புரிவாழ்தி ருக்குமர திருவா
யின் முத்த மருளே, சிறுதாம ரைக்குநிக ரறுமா
மு கக்குழவி திருவாயின் முத்த மருளே. (கO)

முத்தப்பருவம் முற்றிற்று.

---

## வருகைப்பருவம்.

செந்தா மரையிற் சிறுசதங்கை சிலம்பக் குதம்பைக்
குழைமின்னச், செம்பொன் னரைஞா ணெகிழ்ந்
தொளிரச் சிகரக் குடுமி யிசைந்தசைய,
வந்தா தரவின் மணிவாயான் மழலை காட்டி மரகதத்
தாய், மடிமீ தேறி முலையுண்டு வளர்ந்து விரிஞ்
சைப் பதிவாழுங்,
கந்தா வருக மணங்கமழுங் கடம்பா வருக வசுரேசர்
காலா வருக பன்னிரண்டு கையா வருக வழித்து
ணைவர்,
மைந்தா வருக மயிலேறு மன்ன வருக வடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வரு
கவே, (க)

உருகா மனமுஞ் சிவஞான முணரா வறிவு முனது
புக, ழோதா நாவு மோதக்கேட் டுவந்தே யினிய
நதிபோலப்,

பெருகா விழியு முடையேனைப் பிறவிக் கடலில்
வீழாமற், பேணி யெடுத்திங் கெனதுள்ளம்
பிரியா விரிஞ்சைப் பதிவாழு,

முருகா வருக சதுர்வேத முதல்வா வருக வினைதீர்க்
கு, முனைவா வருக மலராறு முகவா வருக திருமா
லின்,

மருகா வருக மயிலேறு மன்னு வருக வடியார்கள்,
வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வரு
கவே. (உ)

கண்ணு லுனது திருவடியைக் கண்டாதரவு பெருகி
யிரு, கையாற் றெழுதுன் றிருக்கோயில் காலால்
வலஞ்செய், துனதுபுகழ்,

பண்ணு லுருகிப் புகழ்ந்துகண்ணீர் பாயா வெனை
யுந் தாயாகப், பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழு,

மண்ணுல் வருக வுலகமுழு தாண்டாய் வருக கதி
தருமெம், மையா வருக வாறுமுக வப்பா வருக
விளங்குகதிர்,

வண்ணு வருக மயிலேறு மன்னு வருக வடியார்கள்,
வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருக
வே. (௩)

பூந்தா மரையின் மலருழக்கிப் புதுப்பூங் குவளை
நறவருந்திப், பொய்கைக் கரையி லினிதேறிப்
பொழிலிற் றுயிலு மேதியினங்,

காந்தா ரப்பண் ணளிபாடக் கேட்டு முலையிற் சொரி
யும்பால், கரும்புக் கழகு பெறப்பாயக் கமழும்
விரிஞ்சைப் பதிவாழுஞ்,
சேந்தா வருக மரகதத்தின் சிறுவா வருக குறிஞ்சி
நிலத், தேவா வருக விடரொழிக்குஞ் செல்வா
வருக பசுங்கடம்பின்,
மாந்தா தணிந்து மயிலேறு மன்னு வருக வடியார்
கள், வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக
வருகவே. (ச)

தேவே வருக திருவிரிஞ்சைச் சேயே வருக தெவி
ட்டாத, தேனே வருக சுவையமுதத் தெளிவே
வருக கதிகொடுக்கும்,
காவே வருக பெருங்கருணைக் கடலே வருக கலை
பொழியுங், காரே வருக மரகதத்தின் கண்ணே
வருக விண்ணோர்கள்,
கோவே வருக பெரியகுணக் குன்றே வருக வுப
தேச, குருவே வருக சிவஞானக் கொழுந்தே
வருக வொருகாத்தின்,
மாவே லெடுத்த பரப்பிரம வடிவே வருக வடியார்
கள் வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக
வருகவே. (ரு)

வே று.

அரிய வடவரையை நிறுவி யெழுமதியை யடைக
லெனவரவு கயிறதா, வமுத மெனமுனிவ ரமர
ரரிபிரம ரசுர ரிவர்கள்கடல் கடையுநா,
ளெரியி னுடல்கருக வரியி னுடல்கருக விரவி யுடல்
கருக வுலகெலா, மெரிய வெரிபுகையின் மறைய
வளர்திசையி னிபம தலறிவிழ வரையெலாம்,

விரிய வெழுசலதி கமர்கள் படவருணன் மிகவு மெ
லியமுகி லுருவுபோல், விரவி யடர்தலொடு பரவி
யெழுகொடிய விடமு மமுதமென மிசையவே,
கரிய மிடறுடைய விமல ரருள்குமர கரபு ரியின்
முருக வருகவே, ககன மெனுமுகடு மதிர நடன
மிடு கலப மயிலிறைவ வருகவே. (சூ)

முனிவர் பரவியர கரென வமரர்தொழ முயலன்
முதுகுநெற நெறெனவே, முடியி லிளமதியு நதியு
மசையமறை முரல முழுதுமுடல் புளகமா,
யினிய வரவுபுலி பணிய வடியர்மன மிளகி விழிகண்
மழை பொழியவே, யிரவி லழகுபெற நடன
முடுகியிடு மிறைவ ரருள்குமர வருகவே,
புனித வமுதமெனு நதியில் வருகயல்கள் புடையி
லுழுமுழவர் வெருளவே, புதிய கதலிகனி யுதிர
வெழவுழுத புழுதி தனிலொழுகு மதுவினுற்,
கனியு மளறுபடு பழன முடையசிவ கரபு ரியின்
முருக வருகவே, ககன மெனுமுகடு மதிர நடன
மிடு கலப மயிலிறைவ வருகவே. (எ)

பழைய வரவின்முது கொடிய நடனமது பயில விர
ணியனை முனியவேழ், படியை மலரடியி னளவு
செயவமரர் பசிய கலவமுது கடையவான்
மழையை யொருமலையின் மறைவு செயவிடையர்
மனையி லளைதிருடி வலுமையான், மருது பொர
வலகை முலையி னமுதுகொள வலவன் மகிழ்மருக
வருகவே
யுழவ ருழுதுபயிர் முழுது மிடநறவ மொழுகு குவ
ளையெனு மலரின்மே, லுலவி மதுரவிசை முரலு
மளிகள்பெற வுதவி யிடுவதென வயலில்வாழ்

கழையின் விழுதரள மதியி னிலவுதரு கரபு ரியின்
முருக வருகவே, ககன மெனுமுகடு மதிர நடன
மிடு கலப மயிலிறைவ வருகவே. (அ)

அரையில் வடமசைய வழகு பெறுகுடுமி யசைய
வுமைமகிழ வருகவே, யலர்கொள் சரணவணி
கலக லெனமழலை யமுத மொழுகியிட வருகவே,
யிரையு முததியது சுவற வயிலைவிடு மிளமை யிடுகு
மரன் வருகவே, யினிய கவிதைகொடு நினது
புகழ்பரவி யெமது வினைகள்கெட வருகவே,
வரைகொ ளரவமுயன் முசுவொ டிருளிமரை வரு
டை கரடிகளை கவரிமான், வழுவை யுழுவையரி
மறவர் குறவர்தின மருவு மலைகிழவ வருகவே,
கரையி னதியினலை பொருது தரளமெறி கரபு ரியின்
முருக வருகவே, ககன மெனுமுகடு மதிர நடன
மிடு கலப மயிலிறைவ வருகவே. (கூ)

அனகை யருள்பொழியும் விமலை யழகொழுகு மமலை
யருள்குமர வருகவே, யசுரர் மகுடமணி சிதற
வயில்விசிறு மறுமு கவவருக வருகவே,
பனக மௌலியரன் மகிழ மறையிறுதி பகரு மணிய
தர வருகவே, பரவி யெழுமுனிவர் பணியு மொ
ளியுடைய பவள விருசரண வருகவே,
மனமு மொருமைபெற விழிக ளருவியென வழிய
வுளமுருக வருகவே, மறலி தொடர்புகெட வெ
னேயு னடியரொடு மருவி யிடவருள வருகவே,
கனக மதிலருண கிரண மெனநிலவு கரபு ரியின்
முருக வருகவே, ககன மெனுமுகடு மதிர நடன
மிடு கலப மயிலிறைவ வருகவே.

வருகைப்பருவம் முற்றிற்று.

---

# 7 அம்புலிப்பருவம்.

நீல வூணினர்க ணுவை நீயிவனு நீல வூணினர்க
ணுனவ, னேமி யங்குவடு சூழ்வை நீயிவனு நேமி
யங்குவடு சூழ்பவ,

னேல நீயரிய மானு ளாயிவனு மென்று மோரரிய
மானுளா, னிருளு மாசினையொ ழிப்பை நீயிவனு
மிருளு மாசினையொ ழிப்பவ,

ஞேல மாமலையி லெழுவை நீயிவனு மொப்பி லாம
லையி லெழுபவ, னுனக்கி வாறுநிக ராத லாலிவனு
னக்கு லாவியழை யாநின்று,

ஞாலு மாமயில னுடுதற்கமுத வம்பு லீவருக வருகவே,
யமரர் பரவுகர புரிய னுளமகிழு வம்பு லீவருக
வருகவே. (க)

இன்ன நீமலைவ லஞ்செய் வாயிவனி னமக்கு முன்
னிலம்வ லஞ்செய்தோ, னெறிக திர்க்கிடைவை
நீயு முச்சுடரி லிவன வன்கதிர ழிப்பவன்,

மன்னி வாழ்மறுமு கம்ப டைப்பையிவன் மறுவி லா
வறுமு கத்தினுன், வரும கத்திருளொ ழித்தி டா
யிவனு மனவ கத்திருளொ ழிப்பவன்,

மின்ன ராவுகொளு முணவு நீயிவனவ் விடவ ரா
வுண்மயில் வாகனன், மேனி நீவளர்ந் தழிவை
யென்றுமிவன் மேனி தானுமழி யாதவ,

னன்ன தாலிவன் றனக்கொவ் வாயமுத வம்பு லீ
வருக வருகவே, யமரர் பரவுகர புரிய னுளமகிழ
வம்பு லீவருக வருகவே. (உ)

வரிசை கொண்டசுடை நீய தாகவிருண் மானவை
யூர்மதனன் வாழ்வையு, மனமகிழ்ந்ததிக மைத்து
னச்சரச வளமை யாலொழிய மாற்றியே,

யுரிமை கொண்டவவ னுனை யிஃபிடரி லுன்னைவை
த்தருளி நாடொறு, முனக்க வங்கவிகை யாயி
டும்பதமு முதவி னுலும்வ னுதவுவான்,

பிரிய மாயுனைவி ருட்பி வாவெனவ ழைத்த பேறெ
வர்கள் பெற்றுளார், பெற்றி யாலுனது பெற்றி
யேயினிய பெற்றி மாதவர்கள் காணுதற்,

கரிய கந்தன்விளை யாடு தற்கமுத வம்பு லீவருக
வருகவே, யமரர் பரவுகர புரிய னுளமகிழ வம்
பு லீவருக வருகவே. (௩)

பத்தி யாயுலகை வட்ட மிட்டுவரு பரப ரப்பினையு
மாற்றுவான், பழுது பட்டகலை முழுது முற்றிலகு
பண்பை யுந்தருவ னீதலா,

னித்த மாயுடல முற்றி டுங்குறையை நீக்கி யே
கருணை நோக்குவா, னின்ம லர்க்கருளு மூல மந்
திரமு நின்செ விப்படவு மொழிகுவான்,

றத்து சாகரம தற்கு ளுஞ்சனன சாக ரத்துமுதி
யாமலே, தண்டை கிங்கிணிச தங்கை கொஞ்சு
மிரு தாம ரைப்பதமு முதவுவா,

னத்தன் வேலன்விளை யாடு தற்கமுத வம்புலீ வருக
வருகவே, யமரர் பரவுகர புரிய னுளமகிழ வம்
பு லீவருக வருகவே. (௪)

எண்ணி லாதபல புண்ணி யங்களொயி யற்றி நெஞ்சி
லிரு ளற்றபே, ரேத்தி யேத்தியவ ரோல மிட்ட
லறி லுங்கி டைக்கவரி தானவன்,

விண்ணி னூடுமே றுவாய வுன்னைவடி வேலெ டுத்த
கர நீட்டியே, வேத வாய்மழலை யால ழைத்திடவு
மேவி டாமலுமி ருப்பதோ,

பண்ணி னுண்மதுர மாக வேகவிதை பாடு வார்
வினைக ளோடவே, பச்சை மாமயிலி லேறி வந்
திருப தாம்பு யந்தனைய ளித்திடு,

மண்ணல் வேலன்விளை யாடு தற்கமுத வம்புலீ
வருக வருகவே, யமரர் பரவுகர புரிய னுளமகிழ
வம்பு லீவருக வருகவே. (௫)

பங்க யாசனனை வேத நுண்பொருள்வ ராமை கண்டு
முடி குட்டியே, பாத தாமரையி னாலு தைத்திடர்
ப டுத்தி வன்சிறையில் வைத்தல்போ,

லிங்கு நீயினிவ ராதி ருந்திடினெ ழிற்க ரங்கொடு
பி டித்துன்மே, லெழுந்த கோபமொடு குட்டி
வன்சிறையி லிடுவ னின்றனையு முண்மைகாண்,

கொங்கு லாவுமிரு தண்டை யங்கழல்கள் குந்தி
நின்றுவிரல் சுட்டியே, கொஞ்சு வாய்மழலை மொ
ழியி னாலிவன ழைத்த சால்புகுறை யாமலே,

யங்கை வேலன்விளை யாடு தற்கமுத வம்பு லீவருக
வருகவே, யமரர் பரவுகர புரிய னுளமகிழ வம்
பு லீவருக வருகவே. (௬)

பந்த நீகொளவி ருந்த வஞ்சகர்ப துங்க வேபொருத
தறிவையே, பண்டு நாகரரி நப்பர் வந்தடிப ணிந்த
சால்புதனை யறிவையே,

யுந்தி நீமுழுகி டும்பெ ருங்கடலை யுண்ட வேலு
டைய தறிவையே, யுன்க ணேறுமர வங்க ளஞ்
சிடவு றிஞ்சு தோகையுள தறிவையே,

யிந்த நேரமிவ னண்பு கொண்டுபகை யின்றி யேயி
னிமை யடையலா, மெம்பி ரானெமையு மன்பர்
தங்களொடி ணங்க வேகருணை யருளின,

னந்த ணீர்வயல்வி ரிஞ்சை யம்பதிய மர்ந்த வாறு
முக முடையவே, ளம்பு லீவருக வென்ற னன்
கடுகி யம்பு லீவருக வருகவே. (எ)

எண்டி சாமுகரு மிங்கி தம்புகலு மிந்த்ர தேவனுல
கருளவே, வென்று நீருடையே னும்பெ ரும்
பதவி யின்ப வேனுலகை யருளவோ,

வண்டு போலுமுரு நந்த னுந்திதனில் வந்த வேத
னுல கருளவோ, மந்த்ர வேதமுனி தந்தை யென்
னவரு மஞ்சு ரூபனுல கருளவோ,

சண்ட வீரரெனு நண்ப ரொன்பதின்மர் தங்களோ
டுறவு நல்கவோ, தண்டை சேரிருப தங்க ளுன்
சிரசு தங்க வோவெதுவு மறிகிலே,

மண்டர் சூழ்திருவி ரிஞ்சை யம்பதிய மர்ந்த வாறு
முக முடையவே, ளம்பு லீவருக வென்ற னன்
கடுகி யம்பு லீவருக வருகவே. (அ)

வன்ப ராவுனைவி ழுங்கு துன்புறும ருந்து நேயமுட
னுதவவோ, மங்கை பாகர்பெறு மந்த மந்திரம
கிழ்ந்து நின்செவியின் மொழியவோ,

வுஞ்ச ரீரமரு வுங்க ளங்கமதொ ழிந்து தீரவருள்
புரியவோ வுன்றன் மேனியில குங்க வின்கொள
வொ டுங்கு கூனிமிர நினையவோ,

வின்ப வாரமுத மும்பர் பங்கினிலி ருந்த மாபலனை
யருளவோ, வெங்க ளாலினைவெதெ ரிந்தி வேம்புகலி
னின்று நீபெறுவ தென்கொலோ,

வன்பர் சூழ்திருவைவி ரிஞ்சை யம்பதி யமர்ந்த வாறு
முக முடையவே, ளம்பு லீவருக வென்ற னன்கடுகி
யம்பு லீவருக வருகவே. (௯)

இஞ்சி சூழருணை யன்ப னன்புறவி யம்பு பாடல்களை
யறியலா, மெங்கள் கீரன்மொழி யும்ப சுந்தமிழெ
னுஞ்சொல் வேதநிலை தெரியலாம்,
விஞ்சு சூரர்களை வென்றி டுந்திறல்வி ளம்பு காதை
களை வினவலாம், வெந்த பூதியை யணிந்த தொ
ண்டர்கள்வி ரும்ப வேகவிதை புகலலாம்,
வஞ்ச மோடவரு தண்டை யங்கழல்வ ணங்கலாமு
லகை வலமதா, வந்து சூழ்வதிலு மின்றி வந்தனை
வ லஞ்செய் தேபிறவி யொழியலா,
மஞ்சு மார்வயல்வி ரிஞ்சை யம்பதிய மர்ந்த வாறு
முக முடையவே, ளம்பு லீவருக வென்ற னன்கடு
கி யம்பு லீவருக வருகவே. (௧0)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

---

## சிற்றிற்பருவம்.

வேதன் முடியிற் படுங்கமலம் விண்ணோர் சிரத்தி
லணிபதுமம், விசய மயின்மே லெழுமுளரி விம
லர் புயஞ்சேர் திருக்கஞ்சம்,
சாத மொழிக்கு மம்புயமெந் தலைமே லிருக்கும் புது
நளினந், தண்டை சதங்கை கிங்கிணிசேர் சலசம்
புவியிற் படலாமோ,
காதம் புதிய மணங்கமழுங் கடம்பா முருகா கதிர்
வேலா, கந்தா குமரா பெருங்கருணைக் கண்ணு
வண்ணு கதியருளே,
யாதண் களப மணிமார்பா வடியேஞ் சிற்றி லழி
யேலே, யரசே விரிஞ்சைப் பதிவாழ்வே யடியேஞ்
சிற்றி லழியேலே. (௧)

வங்கத் தரங்கக் கடலன்று மாயக் கிரவுஞ்ச கிரியன்று, வானத் துயரு மாவன்று மருவா ருறையும் பதியன்று,
துங்கத் தசுரர் முடியன்று தொலையா வமரர் சிறையன்று, துரக்க கொடுமோ முகியன்று தொழுவார் பிறவித் துயரன்று,
சங்கத் தவனு மலரோனுந் தவளா சலத்தில் வருவோனுஞ், சரணஞ் . சரண மெனும் புதிய தண்டை முழங்குஞ் சிறுதாளா,
லங்கைக் கதிர்வே லுடையோனே யடியேஞ் சிற்றி லழியேலே, யரசே விரிஞ்சைப் பதிவாழ்வே யடியேஞ் சிற்றி லழியேலே. (உ)

பூத்தே யுலகம் புரப்பாளைப் பொய்யர் தமக்குக் கரப்பாளைப், பொழியுங் கருணை விழியாளைப் பொற்புங் கற்பு மழியாளைக்,
கூத்தை யுடையா னிடத்தாளைக் குவிமா முலைமேல் வடத்தாளைக், குறையா வெண்ணெண் கலைவசாளைக் குளிர்சே ரிமய மலையாளை,
மாத்தே வருக்குந் தெளியாளை வணங்கு மடியார்க் கெளியாளை, வரையைச் சிலையா வளைத்தாளை மறைக்கு முதலாய் முளைத்தாளை,
யாத்தே யாத்தே யெனுங் குமரா வடியேஞ் சிற்றி லழியேலே, யரசே விரிஞ்சைப் பதிவாழ்வே யடியேஞ் சிற்றி லழியேலே. (ந)

பொய்யா வுளத்தி லிருப்பாரைப் பொலியுங் கயிலைப் பொருப்பாரைப், பொருமா கரியை யுரிப்பாரைப் புரமூன் றெரிய வெரிப்பாரைக்,

கையார் மறிமான் மழுவாரைக் கமலா லயன்மா லொரு
  ழுவாரைக், கனக சபையி னடிப்பாரைக் கங்கை
  முடியின் முடிப்பாரை,
மையார் மலத்தை யொழிப்பாரை மதவே ளெரிய
  விழிப்பாரை, மறலி நடுங்கப் பொருவாரை வழிக்
  குத் துணையா வருவாரை,
ஐயயா வையா வெனுங் குமரா வடியேஞ்சிற்றி லழி
  யேலே, யரசே விரிஞ்சைப் பதிவாழ்வே யடியே
  ஞ் சிற்றி லழியேலே. (௪)
இம்மா நிலத்தை யளந்தானை யிகன்மா மருதம் பிளந்
  தானை, யிலங்கா புரியைக் கெடுத்தானை யிமை
  யோர்க் கமிர்தங் கொடுத்தானைக்,
கைம்மா விடுக்கண் களைந்தானைக் ககன மளவா வளர்
  ந்தானைக், கன்றால் விளவை யெறிந்தானைக் கருதா
  ருளத்திற் பிரிந்தானை,
மைம்மா சுணத்தி னடித்தானை வருபா ரதத்தை முடி
  த்தானை, வைய மனைத்து மயின்றானை யடத்தி
  னிலையிற் றுயின்றானை,
யம்மா னம்மா னெனுங் குமரா வடியேஞ்சிற்றி லழி
  யேலே, யரசே விரிஞ்சைப் பதிவாழ்வே யடியே
  ஞ் சிற்றி லழியேலே. (௫)

வே று.

பசுமை மலர்த்தட ஙளின மளித்திரள் படிவ வனற்
  சொரி கரிபோலே, பதும நிறத்தினை யறுபத முற்
  றுடல் பவள மெனத்திகழ் வயலூடே,
கசியு மதுப்பொழி குவளை களைச்சில கடைக ளெனக்
  களை மடமானார், கரகம லத்தினில் வளையொலி
  சித்தசர் கலைக ளுரைத்தருள் கரனூரா,

நிசியி னிருட்கண மெனுமுரு வத்தொடு நிலவி னென்
யிற்றெடு முயர்வான்மே, னிலவிய செக்கரை
யனைய மயிர்த்தலை நிரையொடு முக்கிர முடனேசூ,

மூசுரரை வெட்டிய வயிலுள கைத்தல வடியவர் சிற்
றிலை யழியேலே, யழகொழு கப்புழு கொழுகிய
பொற்புய வடியவர் சிற்றிலை யழியேலே, (சு)

முதல்வ ரிணைப்பத மலர்கொ டரக்கிய முனிவைரி
னைத்தின மலையாதே, மொழிதி யெனக்கழல் செ
றியு மலர்ப்பத முளரி தனைப்பணி தல்போலே,

கதிர்மணி யிட்டிழை கனகம திற்றிகழ் கனவிட பத்
தினை யடியூடே, ககனமு கட்டினி லிருளைய கற்
றிய கலைமதி யுற்றெழு கரனூரா,

ததிபரு கச்சுதர் மலரி லிருப்பவர் சனக ரகத்தியர்
புலவோர்மா, தவர்கள் வசிட்டரோ டடியர் துதி
த்திரு சரணம் விருப்பொடு தொழவேதா,

னதிமது ரத்துடன் மறைசொலு முத்தம வடியவர்
சிற்றிலை யழியேலே, யழகொழு கப்புழு கொழு
கிய பொற்புய வடியவர் சிற்றிலை யழியேலே. (எ)

மழையுறு வத்திரு வுருவு படைத்தவன் மலரவ னுற்
றிடு மிடமோவார், மதலை தனக்குயர் முடியை
வளைத்தருள் வரதர் வழிக்கொரு துணையாமேவார்,

கழறெழு தற்கவர் வருபொழு துற்றிடு களைபகலப்
பயி லுதல்போலே, கரிய மணிக்கிர ணமுமதி
லிற்சன கமுமரு வித்திகழ் கரனூரா,

பழனி திருத்தணி யருணை யிடைக்கழி பழமுதிர்
பொற்கிரி யலைவாயோர், பணிமலை சற்குரு மலை
யொடு பற்பல பனிமலை யுச்சியி லுறைவோனே,

யழலொளி கக்கிய வயிலுள கைத்தல வடியவர் சிற்
 றிலே யழியேலே, யழகொழு கப்புழு கொழுகிய
 பொற்புய வடியவர் சிற்றிலே யழியேலே, (அ)
இரவி ரதத்துள புரவி கடத்தளி யிடவுயர் பொற்
 றிரு மதின்மேலே, யெழுதிய சித்திர விடப மணி
 க்கொடி யிமையவர் கற்பக மலருடே,
பொரவத னிற்பரி மளநற வத்துளி புயலுல கித்தரு
 ண் மழைபோலே, பொழிய வயற்றிகழ் பயிர்க
 டழைத்தெழு புகழை விளக்கிய கரனூரா,
வரமரு ளித்தன தடியவ ருச்சியின் மலரடி வைத்
 ததி மதமாறு, மருவலர் முப்புர மெரிய நகைத்
 தடன் மதனை யெரித்தவவ் வரையாளு,
மரன்மகி ழப்பொரு ளுரைசெயு முத்தம வடியவர்
 சிற்றிலே யழியேலே, யழகொழு கப்புழு கொழு
 கிய பொற்புய வடியவர் சிற்றிலே யழியேலே. (கூ)
மழலை தனிற்சிவ மறைகண் முழக்கியு மணியை முழ
 க்கியு மணிவாயால், வயிரை முழக்கியு மொரு
 குழல் பற்றியு மகிழ்பறை கொட்டியு மணியாலே,
மிழையு மலர்ப்பத நடன மியற்றியு மிசைகள் பயிற்
 றியு மகிழ்நாளு, விரத மெனக்குல வரையை நட
 த்தியு மிறைவர் களிப்பது பெறவேழ்பார்,
முழுது மடிக்கடி யுலவிய மைக்குல முதலை நடத்
 தியு மருவார்மேன், முனியு மருப்பிரு பிறைநிகர்
 கைக்கய முனியை நடத்தியும் விளையாடி,
யழகிய பொற்கர புரியுறை யுத்தம வடியவர் சிற்றிலே
 யழியேலே, யழகொழு கப்புழு கொழுகிய பொ
 ற்புய வடியவர் சிற்றிலே யழியேலே, (க0)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

---

## சிறுபறைப்பருவம்.

சந்தரச லம்பொருவு முலைசுமந் திழையெனத் தளரு
மிடை யிந்த்ராணியுந், தடவிகட கரடகவ ளத்
தவள வொருநாலு தந்தவிறன் மாவுமணியு,
மைந்தாரு வுஞ்சுரபி யும்படைத் திந்திர னு மம்மனை
பெறக்கருணையா, லங்கைவேல் கோலரக வசுரர்
முடி பந்தா வடித்துவிளை யாடுமரசே,
யெங்காவெ னப்பரவு தொண்டர்முடி மீதிலணி யிரு
பாதமலர் கமழவே, யின்பமட வார்கரும் குழலி
னுங் காமமுறு மிளைஞர்தங் கொண்டைகளினுஞ்,
செந்தாழை யின்புது மணங்குலவு காணூர சிறுப
றை முழக்கியருளே, திருமழலை மொழியின்மறை
பலபல முழக்குமுனி சிறுபறை முழக்கியருளே,
சந்தியினு மந்தியினு முள்ளும் புறம்பினுஞ் சாகா
வரம்பெற்றுமே, தண்டமுழு துந்தனது பெயர்நி
றுவு மிரணியன் றன்னைநர சிங்கவடிவாய்,
வந்துமணி வாசற் படிக்கிடை கிடத்திமணி மார்புகீ
ண் டொளியுகிரினுன், மணிக்குடல் பிடுங்கியுதி
ரந்தனை யருந்திய மாமேக வண்ணன்மருகா,
வந்தண ருரைத்தருளு மாகம முழக்கமு மமுதமெனு
மொழிவனிதைமா, ராடலின் முழக்கமும் பாட
லின் முழக்கமு மடியார்க ளோதியருளுஞ்,
செந்தமிழ் முழக்கமுமு முங்கா னூராளி சிறுபறை
முழக்கியருளே, திருமழலை மொழியின்மறை பல
பல முழக்குமுனி சிறுபறை முழக்கியருளே. (௨)
மத்தமத வாரணந் தன்னிழலை மாறெனை வளர்ந்து
விசை யிற்பாயமேன், மண்ணுருவி யரவின்மணி
தெரிதரலு மற்றதன் மருப்பிற் சொரிந்தமுத்தும்

புத்திவி யுடன்மதிப மொத்தடவி யிருளெலாம்
போகத் துரந்துதிகழப், பூமகண் மூலைக்கணியு
மாரவட மெனவருவி புரளுமலை யாளு மிறைவா,

சத்தமிலை வழுவாம லந்தமொரு சற்றுந் தளர்ந்து
வெளி ருமலமுதந், தழுவுபதி னூறு மிரந்திருப்
புகழெனுந் தமிழ்மாலை சாற்றியுருகிச்,

சித்தபெறு மருணகிரி நாதபுகழ் கரனூர சிறுபறை
முழக்கியருளே, திருமழலை மொழியின்மறை பல
பல முழக்குமுனி சிறுபறை முழக்கியருளே, (௩)

மந்தமா ருதரதமு மந்திமா லைக்களிறு மாசுக மெ
னுந்துரகமும், வளர்மதிக் கவிகையுந் திரைகடற்
டகமு மைக்கோகி லக்காளமும்,

கந்தமா மோலையுஞ் சுரிகையும் பெற்றொரு கரும்
பணி சுரும்புசிலைநாண், கமழுமலர் வாளிக்கொண்
டுலகமே ழும்பொருத காமமத வேண்மைத்துனு,

தந்திவாழ் பழனியங் கிரியினும் வெள்ளிமலை தன்னி
லும் மருணைதனிலுஞ், சந்ததமு முக்குவளை மல
ர்மருத் தணியாச் செருத்தணி திருத்தணியினுஞ்,

செந்திமா நகரினும் பயில்குமர கானூர சிறுபறை
முழக்கி யருளே, திருமழலை மொழியின்மறை பல
பல முழக்குமுனி சிறுபறை முழக்கியருளே. (௪)

மலையைப் பிளந்தசுரர் மார்பைப் பிளந்துதிரை வா
ரிநீ ருண்டுமெகவான், வாழ்வைப் புரந்தமரர் துன்
பந் துரந்துவட வரைபோல வருதாரகன்,

மலையைப் பிளந்துபங் தாடிவே தாளபூ தங்கள்பசி
தன்னைமாற்றச், சண்டனணு காமலடி யாரிடர்
தணிக்குமொரு தனிவே லெடுத்தவரசே,

யலையிர் பொலிந்துவரு பாலியினில் வரும்வாளை யா
யிரம் வலைபீறிநா, ருளைவிழ முட்டிவிளை யாடிவய
லோடிமிக வரவா ரித்துமதவேள்,

சிலையைத் தடிந்துவங் துலவுகர ஞாராளி சிறுபறை
முழக்கியருளே, திருமதலை மொழின்மறை பல
பல முழக்குமுனி சிறுபறை முழக்கியருளே. (ரு)

வே று.

அதிர்த்திடு குரல்களு மெரித்திடு புருவமு மழறி
பொறி விழிகளுமா, யதுக்கிய சிறுபிறை யெயிற்
றொளி களுநடை யதிர்ச்சியு மணியணியாய்,

விதிர்த்திடு படைகளு மனைப்புய லுருவமு மிகுத்
துள தலைகளுமாய், வெளிப்படு மசுரர்கள் சிரக்
குவை பலபல விழப்பொரு மொருசதுரா,

பொதுத்தனி லழகுற நடித்தவர் மழுவது பொறுத்
தவர் குறுந்தலர் வாழ், புரத்தினை யெரிபட நகைத்
தவர் மதனுடல் புகைத்தவ ரமரர்களான்,

முதுக்கொடு விடநுகர் மிடற்றின ரருள்குக முழக்
குக சிறுபறையே, முழுத்தமிழ் தெரிகர புரத்
தறு முகமுனி முழக்குக சிறுபறையே. (சா)

அருக்கனை முறுவலை யுதிர்த்தெழு மதியுட லரக்கிய
வெமனிருதோ, ளறுத்தொரு குயில்கொடி சரி
த்தலை விழவிழ வடித்தம ரர்களுடனே,

தருக்கொடு மகம வளர்த்தவன் மணிமுடி தரித்
தவ னகமனையா, டரித்திடு குழையற வடித்தடி
யவர்வினை தவிர்த்திடு மவர்துணைவா,

நெருப்பெழ விழிகளை விழித்தல கைகள்பல நிருத்
தம திடுவெழுபார், நெளித்திட வருநடை படை
த்திடு மசுரர் ணிணக்குவை குவைபடவே,

முருக்கிய வடியயி லெடுத்தரு ளியகையின் முழக்
குக சிறுபறையே, முழுத்தமிழ் தெரிகர புரத்
தறு முகமுனி முழக்குக சிறுபறையே. (எ)

கருப்புவி லுடையவன் மலர்க்கணை யுடையவள்
கடைக்கணி லருளுடையாள், கருப்புகு வினைய
னை யெடுத்தவ னடியவர் களித்திட வரமருள்வா

னருப்புறு மணிமுலை யுறுத்திட வமலனை யணைத்தவ
ளுலகமெலா, மளித்தவ ளுயிர்களை வளர்த்தவ
டிரிபுர மழித்தவ ளிடரடையா,

டிருச்சடை மிசைமதி முடித்தவள் பலகலை தெரித்
தவ ளரியறியாள், சிறப்புள வரமது பெருத்தவ
ளிடையது சிறுத்தவ ணிறையழியாண்,

முருக்கித ழுமையவ ளளித்தருள் குருபர முழக்குக
சிறுபறையே, முழுத்தமிழ் தெரிகர புரத்தறு
முகமுனி முழக்குக சிறுபறையே. (அ)

இளைத்திடு வபவினை குளித்திடு மடியரை யெடுத்திடு
மொருபுணையா, யெதிர்த்திடு மசுரர்கண் முடித்
தலை யெனுமதி லிடித்திடு மொருபடையா,

யளப்பற வயனெழு தெழுத்தெனு மலினம தகற்றிடு
மொருகலையா, யடித்தல நினைபவ ரிரப்பற நவ
நிதி யளித்திடு மொருதருவாய்,

விளக்கிய வடியயி லிருக்குமி னியவெழில் விரித்தொ
ளி விடிமுறையாய், விரைத்தெழு கடுநடை விடை
ச்சிவ னுமையவள் விழிக்கணி மதுமலராய்,

முளைத்தம ரர்கள்பய மெழித்தரு ளியகையின் முழ
க்குக சிறுபறையே, முழுத்தமிழ் தெரிகர புரத்
தறு முகமுனி முழக்குக சிறுபறையே. (கூ)

வடித்திடு கணையென மணிக்குழை கறுவிய மதர்த்
திடு மிருவிழியான், மணத்தொளி பலவிடு மகிழ்
புகை யிடுமெது மலர்ச்செரு கியகுழலா,

லடிக்கடி விடரறி வினைத்திரு டிகள்கள வட்க்கிய
முறுவலினு, லடற்சிலை மதன்முடி யசைத்திட
லதுவென வசைத்திடு மலைமுலையா,

லெடுத்திரு கனதன முளைப்புட னனுதின மிலைத்
திடு கொடியிடையா, விழுக்குடை மயலினை யளி
ப்பவர் வசமுறு மெமக்குள விடர் கெடவே,

முடிச்சடை யுடையவ னளித்தருள் குருபர முழக்
குக சிறுபறையே, முழுத்தமிழ் தெரிகர புரத்
தறு முகமுனி முழக்குக சிறுபறையே. (௧0)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

---

## 10 சிறுதேர்ப்பருவம்.

மாதரிரு விழியாகு மம்புக்கு மதனவேள் வாளிக்கு
நடுவாகியே, மாலாகு மருணகிரி நாதரரு ளைச்
சிகரி வடவாசு லிற்பயிலநம்,

பாதமலர் பாடுநீ யென்னவடி யேனுமெப் படிபாட
வென்றவளவிற், பத்திதரு முத்தநகை யத்தியி
றை வாவெனப் பாடென்று சொல்லியியலாற்,

பூதலமு மெங்களையு மீடேற நாவிற் பொறித்தவ
ருரைத்தகவிதைப், புத்தமுது பன்னிரு செவிக்
குநிறை யக்கொண்டு போதமு னளித்தருளினுற்,

சீதளம லர்ச்சரண முதவுகர ணுராளி சிறுதே ருரு
ட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசுரர்
முடி சிதறுமுனி சிறுதே ருருட்டியருளே. (க)

ஓராயி ரம்பேரை வருடத்தி லொருநாளி லுண்கின்ற
கற்கிமுகிதா, னென்றுகுறை யாகியிடு மஞ்ஞூறுநக்
கீரர்வர வோடிப்பி டித்தவரையும்,

காராய் குன்றத் தடைத்துரிய நியதிக்க டன்றுறை
முடிக்கவகலக், கருதிமுரு காறவ ருளரத்தருள
நீலக்க லாபமயி லேறியணுகிப்,

பேரான குன்றந் திறந்திவுளி முகியைப் பிளந்துநக்
கீரர்தமையும், பெரியவேல் கொண்டுபுனல் கண்
டுசுனை மூழ்கிப் பிரான்முகலி நதியின்மேவச்,

சீராய திருவருள் புரிந்தகர ஹூராளி சிறுதே ருரு
ட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசுரர்
முடி சிதறுமுனி சிறுதே ருருட்டியருளே. (உ)

மரகதக் கொடிதவஞ் செய்தகதை யுங்கரி மாயவன்
புரமானதும், வருகரன ருச்சித்த துஞ்சது முக
க்கடவுண் மாபூசை செய்தவாறு,

மொருவழித் துணையான தும்பரமர் பரகதிக் குதவி
யது மொருபாலனுக், குச்சியை வளைத்ததுவு முத்
தம வசிட்டருக் கோதியருள் புரியுமுருகா,

வரதனக் கடலிலெழு மாயிரங் கதிருடைய வாதவர்
தமக்கழகதா, யலர்தூவி மேன்மே லருக்கிய மளி
ப்பதென வாகாய முகடுமுட்டத்,

திரைவிரிந் தெழுபாலி நதிவருங் கரஹூர சிறுதே
ருருட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசு
ரர்முடி சிதறுமுனி சிறுதே ருருட்டியருளே. ()

வண்டியிரு சுடராக வையகந் தேராக மாவாக நாலு
மறையும், வானவர்க ளனைவரும் பரிவார மாகம
லர் வாழ்பவன் பாகனாகக்,

கொண்டுமேலே சிலையாக வரவுநா ணுகமால் கோலாக
வழலாகவாய், கோலிறகு காலாக வெந்துமுப் புர
மெரிகொளுந்தவெய் தவர்குமரனே,
யண்டமள வாகுமணி மேடைதனி லேறிமல ரளக
முகி லசையவழகா, யாரவட மசையவதி பார
முலே யசையவிடை யசையமே மகலேகளசையச்,
செண்டுவிளை யாடிமட மாமதர்பயில் கரனூரசிறுதே
ருருட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசு
ரர்முடி சிதறுமுனி சிறுதே ருருட்டியருளே. (ச)
பந்தாடு மடவார்கள் விளையாடு தற்கேறு பாதசெம்
பஞ்சுபதியப், பரியநித் திலமேடை பவளமா மே
டையாய்ப் பரிதியின் கிரணமெனவே,
நந்தா வெறிக்கவது கண்டிதழ்க் கதவுதனை நளினந்
திறக்கவதிலே, நறவொழுகி யோடியிட வயலின்
பரப்பெலா நதியின்ப்ர வாகமாக,
வந்தார வாரமொடு பாலாறு டன்புகுத வாழையின்
கனிகள்சிதறி, வரமள்ளர் தேனுடன் பால்பழம்
பசியுமென வழிவந்த வர்க்கருளியே,
சிந்தா குலம்பொடி படுத்தியருள் கரனூர சிறுதே
ருருட்டியருளே, செயசெயென வமரர்தொழ வசு
ரர்முடி சிதறுமுனி சிறுதே ருருட்டியருளே (ரு)

வேறு.

விழித்தும் பியபுனலின் முழுகிவஞ் சனைபுரியு மடியா
ர்க ளுக்கமுதமே, வினையெனுங் குவடுபொடி பட
நடம் பயிலுமொரு மயில்வாக னக்கடவுளே,
பழிசுமந் திடுமசுரர் முடியொடுந் தலைசிதற வடிவே
லெ டுத்தவரசே, பவமெனுங் கடலில்விழு மெ
னையுமுன் பெனுமினிய கரையேற விட்டபுணையே,

பொழிகரும் புயலனைய வினியவம் பிகைமுலைகள்
பொழிபால் குடித்தகளிறே, புதியசெங் கமலம
லர் சரவணந் தனின்மருவி விளையாடி யிட்டவரசே,
செழியசெந் தமிழ்குலவு திருவிரிஞ் சையின்முருக
சிறுதே ருருட்டியருளே, சிவசிதம் பரநட்டன மிடு
திகம் பரர்குமர சிறுதே ருருட்டி யருளே. (கூ)

கனககிங் கணிகள்கல கலகலென் றொலிபரவு மிரு
தாம ரைச்சரணனே, கடைபடுங் கடலிலெழு
மமுதமுண் டவர்பரவு கருணா கரக்குரிசிலே,
மனமுமைம் புலனுமொரு வழிசெலும் படியெனது
மலமா சொழித்த குகனே, வளர்சிலம் பிடைபொ
ழியு மழையெனும் படிசொரியு மதவா ரணற்கிளை
யனே,
தனனதந் தனனவென வளிமுழங் கியகுவளை மண
மாளி கைச்சதுரனே, தபனசெங் கதிருதய முலக
றிந் துணரமுரல் சரணயு தக்கொடியனே,
தினகரன் சசியளவு திருவிரிஞ் சையின்முருக சிறு
தே ருருட்டியருளே, சிவசிதம் பரநட்டன மிடிதி
கம் பரர்குமர சிறுதே ருருட்டியருளே. (எ)

முதியவம் புயனையொரு குடிலையின் பொருள்வினவி
முடிமீது குட்டுமுனியே, முழுதுமன் பர்களிதய
மலர்குளிர்ந் தலரவரு முதிராத பொற்பரிதியே,
கதிபெறும் படியுலகி லுயிரெனும் பயிர்தழைய வரு
ணீ ரொழுக்கு முகிலே, கயிலையம் பிகைமுழுக
வதாமஞ் சனமுதவு மபிஷேக பொற்கலசமே,
புதியசெந் தமிழ்மணமு மறையுடன் கலைமணமு மழி
யாம லர்க்குமுதனே, பொதியவந் தணனுருகி
யுருகிவந் தனைபுரியு மறுமாமு கக்குழவியே,

சிதைவிறண் டலைமருவு திருவிரிஞ் சையின்முருக
சிறுதே ருருட்டியருளே, சிவசிதம் பரநடன
மிடுதிகம் பரர்குமர சிறுதே ருருட்டியருளே. (௯)
உலகமுண் டுலகுதனை யொருபதந் தனிலளவு செயு
நா ரணற்குமருகா, வுதயசெங் கதிரனைய சரண
பங் கயமெனது முடிமே லழுத்து முதல்வா,
சலதிவெந் தலறியிட வரைபிளந் திடியவடி யயிலே
வி விட்டதலைவா, தவமெனும் பெருமையுள குறி
யவன் பெறவினிய தமிழ்நூ லுரைத்தசதுரா,
மலையினும் பெரியதன வினியவஞ் சியர்பயிலு மணி
மாளி கைச்சிகரமேன், மரகதஞ் சிறுபகலி லொ
ளிதயங் கிடவதனை யிருண்மாலை யுற்றதெனவே,
சிலைமதன் சமர்குலவு திருவிரிஞ் சையின்முருக சிறு
தே ருருட்டியருளே, சிவசிதம் பரநடன மிடுதி
கம் பரர்குமர சிறுதே ருருட்டியருளே. (௰)
அகநெகிழ்ந் துருகியிரு விழிசலம் பொழியவுன திரு
நாடு திக்கவறியே, னனுதினங் கலைமறைக ணெறி
நடந் திடல்வழுவி யதிபாத கத்தைநினைவே,
னிகபரந் தனையறியு மறிவறிந் திடுமுனிவ ரிடநாடி
யுற்றுமருவே, னெனையுமன் பினர்களுட னடிமை
கொண் டருளியெழு பவவே ரொழிக்குமரசே,
மகரகுண்ட லமசைய முலைசுமந் திடயசைய மலை
போலி ருக்குமுலைமேன், மணிவடங் களுமசைய
களபகுங் குமவிரக மடவார் நிருத்தமிடவாழ்,
சிகரமண் டபமருவு திருவிரிஞ் சையின்முருக சிறு
தே ருருட்டியருளே, சிவசிதம் பரநடன மிடுதிக
ம் பரர்குமர சிறுதே ருருட்டியருளே. (௧௧)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.